# தொழிலாளர் தினமான இன்று உழைப்பால் உயர்ந்த உத்தமர்



## பேக்கரி மஹராஜ் உரிமையாளர் அறமனச் செம்மல் சீனு சின்னப்பா

இறைவனடி சேர்ந்தார்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனிடம் பிரார்த்திப்போம்

01.05.2022 ஞாயிறு

புதுகை வரலாறு நாளிதழ்






புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








திங்கள் ❖ மே. 02, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 7 ❖ இதழ் 207 ❖ ரூ.10


### மதுரை அரசு மருத்துவக் கல்லூரி முதல்வருக்கு சிக்கல்

# வெயிட்டிங்

## எம்.பி.பி.எஸ் மாணவர்களுக்கான வரவேற்பு விழாவில் சமஸ்கிருதத்தில் உறுதிமொழி ஏற்கப்பட்டதால், முதல்வர் ரத்தினவேல் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டார்

மதுரை, மே. 2:

மதுரை மருத்துவ கல்லூரியின் முதலாம் ஆண்டு எம்.பி.பி.எஸ் மாணவர்களுக்கான வரவேற்பு விழா நேற்றுமுந்தினம் நடந்தது. மதுரை மாவட்ட ஆட்சியர் அனீஷ்சேகர் தலைமை தாங்கினார். கல்லூரி முதல்வர் டீன் ரத்தினவேல் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினர்களாக தமிழக அமைச்சர்கள் மூர்த்தி, பிடிஆர் பழனிவேல் தியாகராஜன், எம்.எல்.ஏ.க்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.




அப்போது மாணவர்கள் சமஸ்கிருதத்தில் உறுதிமொழி ஏற்றனர். இதனால் அமைச்சர்கள் பிடிஆர் பழனிவேல் தியாகராஜன், மூர்த்தி உள்ளிட்டோர் அதிர்ச்சி அடைந்தனர். நடைமுறையில் இல்லாத இந்த உறுதி மொழி, சர்ச்சையை ஏற்படுத்தியது. இந்நிலையில், மருத்துவக்கல்வி இயக்குநரகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தமிழகத்தில் உள்ள அனைத்து மருத்துவக் கல்லூரிகளிலும் HIPPOCRATIC உறுதிமொழியே பின்பற்றப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், மதுரை அரசு மருத்துவக் கல்லூரியில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில், HIPPOCRATIC உறுதிமொழிக்கு பதிலாக மகரிஷி சரக் சப்த் எனும் உறுதிமொழி மேற்கொள்ளப்பட்டதாகவும், இது வன்மையாக கண்டிக்கத்தக்க செயல் என்றும் கூறப்பட்டுள்ளது. விதிமுறையை மீறி மகரிஷி சரக்சப்த் உறுதிமொழியை மாணவர்களிடம் எடுக்க வைத்ததற்கு, துறைரீதியாக விசாரணை நடத்த அமைச்சர் மா.சுப்பிரமணியன் உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், கல்லூரி முதல்வர் ரத்தினவேல் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கும் இனி வரும் காலங்கிளல் அனைத்து துறை தலைவர்களும் இப்போகிரேடிக் உறுதிமொழியை கடைபிடிக்க வேண்டும் என்று மருத்துவக் கல்லூரி இயக்குனர் உத்தரவிட்டுள்ளார்.

இதற்கிடையே திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடியில் 29ம் ஆண்டு முத்தமிழ் மன்ற இலக்கிய நவரசத் திருவிழா இரண்டு நாட்கள் பல்வேறு தமிழ் இலக்கிய தலைப்புகளில் பல்வேறு அறிஞர்கள், பேச்சாளர்கள் தலைமையில் நடைப்பெறுகிறது.

இதில் பங்கேற்று பேசிய தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், இலக்கிய வாசம் நிறைந்த ஊர் வாணியம்பாடி, எனக்கு மட்டும் அதிகாரம் இருந்தால் வாணியம்பாடியில் படித்தகவிகோவிற்கும்பல தமிழ் அறிஞர்களுக்கும் பத்மபூஷன் விருது வழங்கியிருப்பேன்.

தமிழனுக்கு மறதி அதிகம். பெரியார், தியாகராஜர், அண்ணா போன்ற பல பெரிய தலைவர்களாலே தமிழன் என்ற உணர்வை நாம் அறிந்தோம். உலகில் எவ்வளவு மொழி தோன்றியும் பழ மொழிகள் செத்து விட்டது, உயிரோடு இருக்கிற மொழி தமிழ் மொழி மட்டுமே. மொழி வளத்தோடு இருக்கிறது தமிழ் என்றார்.



சென்னை, கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் நேற்று நடைபெற்ற நெடுஞ்சாலைத்துறையின் 75ஆவது ஆண்டு விழாவில், பவள விழா நினைவுத்தூணை திறந்து வைத்து. சென்னை மாநகரில் மத்திய கைலாஷ் சந்திப்பில் ரூ. 46.54 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மேம்பாலத்திற்கும், மதுரை இராஜாஜி மருத்துவமனை அருகில் கோரிப்பாளையம் சந்திப்பில் ரூ. 199.12 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள சாலை மேம்பாலத்திற்கும், கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலையையும், விவேகானந்தர் பாறையையும் இணைக்கும் வகையில் ரூ. 37 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள கண்ணாடி இழையிலான நடைமேம்பாலத்திற்கும் முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.






### எம்ஆர்பியை விட கூடுதல் விலை வைத்து கொள்ளையடிக்கும் அதிகாரிகள்

## கண்டுகொள்ளாத துறையின் அமைச்சர் தமிழக முதல்வர்: கிராமசபை கூட்டத்தில் தீர்மானம்

கறம்பக்குடி, மே. 2:

புதுக்கோட்டை மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் ஊழலுக்கு துணை போகும் அதிகாரிகளுக்கு சம்பட்டி அடி கொடுக்கும் வகையில் எம்ஆர்பியை விட கூடுதலாக வசூல் செய்யும் அதிகாரிகளுக்கு கடிவாளம் போட கிராமசபை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை தாலுகா துவார் ஊராட்சியில் உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு நேற்று நடந்த கிராம சபை கூட்டம் ஊராட்சி மன்ற தலைவர் புஷ்பலதா செந்தில் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கணேசன், ஒன்றிய கவுன்சிலர் திருப்பதி, துவார் கிராம நிர்வாக அலுவலர் சரவணன், ஊராட்சி செயலாளர்காளிமுத்து மற்றும் அதிகாரிகள் பொதுமக்கள் கலந்துகொண்டனர். கிராமசபை கூட்டத்தில் 35 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இதில்

அக்னியாறு அணைக்கட்டு வாய்க்கால் மற்றும் ஏரி குளங்களை கருவே மரங்களை அகற்றி தூர்வாரிடவும், துவார் கிராமத்தில் அரசு நேரடி நெல்கொள்முதல் நிலையம் அருகில் சுமார் 10 ஏக்கர் அரசுக்கு சொந்தமாக உள்ள இடத்தில் அரசின் நெல் சேமிப்பு கிட்டங்கு அமைத்திட வேண்டும் என்பன உள்ளிட்ட 35 தீர்மானங்கள் பதிவேட்டில்



ஏற்றப்பட்டது. இதில் 22வது தீர்மானமாக அரசு மதுபானக்கடை டாஸ்மாக்கில் அரசு நிர்ணயித்துள்ள விலை பாட்டிலில் குறிப்பிடபட்டு இருக்கும் எம்ஆர்பி விலையிலிருந்து 10 ரூபாய் முதல் 30 வரை கூடுதலாக வசூலிக்கப்படுகிறது இதனை கட்டுப்படுத்த வேண்டும் என பொதுமக்களின் சார்பாக வைக்கப்பட்ட



தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பதிவேட்டில் ஏற்றப்பட்டது.

**ஜாதிவாரி கணக்கெடுப்பு வேண்டும்**

இதைப்போல் புதுக்கோட்டை மாவட்டம் சேந்தன்குடி ஊராட்சியில் நடந்த கிராமசபை கூட்டத்தில் பெரியதம்பி என்பவரின் மகன் ரவிக்குமார் என்பவர் கோரிக்கை ஒன்றை ஊராட்சி மன்ற தலைவர் செல்வ நாயகத்திடம் அளித்தார் அந்த மனுவில் தாம் முத்தரையர் சமூகத்தை சேர்ந்தவர் என்றும் அரசு வேலைகள் மாணவர்கள் படிப்புகளுக்கு இட ஒதுக்கீடு வழங்கும் போது மக்கள் தொகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யாமல் சாதாரணமாக ஒதுக்கீடுகள் நடைபெறுவதாகவும் இதனால் தங்கள் சமுதாய மக்களுக்கு பெரிய அளவில் பாதிப்பு ஏற்படுவதாகவும் உடனடியாக தமிழக அரசு ஜாதிவாரி கணக்கீடு செய்து இட ஒதுக்கீடு வழங்கிடுமாறு வலியுறுத்தி மனு அளித்தார் அவரின் மனுவை ஏற்றுக்கொண்டு தீர்மானம் சேர்க்கப்பட்டுள்ளது.

## துவார் கிராமத்திற்கு ராயல் சல்யூட்

தமிழக அரசை வாழ வைத்துக் கொண்டிருக்கும் மது பிரியர்களின் பொருளாதாரத்தை பகல் கொள்ளையடிக்கும் டாஸ்மாக் கடைகளில் உள்ள ஊழல் பெருச்சாளிகள் அரசு நிர்ணயித்துள்ள எம்ஆர்பி விலையைவிட மதுபாட்டில் ஒன்றுக்கு கூடுதலாக 10 விலை வைத்து வசூல் செய்து வருகின்றனர். இது கொள்ளையோ கொள்ளை என்று வருடக்கணக்கில் கூக்குரல் எழுப்பி வருகிறது புதுகை வரலாறு. ஆனால் நடவடிக்கை எடுக்க வேண்டிய அமைச்சரும் சரி முதலமைச்சரும் சரி கண்டுகொள்வதாக தெரியவில்லை. இப்படியிருக்கையில் தனிநபர் நடத்தக்கூடிய வணிக நிறுவனத்தில் எம்ஆர்பி விலையை விட அவர் கூடுதலாக விற்பனை செய்தால் அவர் மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசாங்கத்திற்கு எந்தவிதத்திலும் தகுதி இல்லை, காரணம் அரசுத்துறையில் மாபெரும் ஊழல் நாள் ஒன்றுக்கு பல கோடி ரூபாய் கொள்ளையடிக்கப்படும் சூழலில் தனிநபரை கட்டுப்படுத்த இவர்களுக்கு தார்மீக உரிமையில்லை என்பதே புதுகை வரலாறின் நிலைப்பாடு.

உதாரணமாக புதுக்கோட்டை மாவட்டத்தில் மொத்தம் 140 டாஸ்மாக் கடைகள் உள்ளன நாளொன்றுக்கு சராசரியாக ஒரு லட்சம் மதுபாட்டில் விற்பனையாகிறது. ஒரு பாட்டிலுக்கு 10 ரூபாய் கூடுதலாக வசூல் செய்யப்படுகிறது, ஒரு லட்சம் பாட்டிலுக்கு 10 லட்சம் ரூபாய் கொள்ளை அடிக்கின்றனர். இது அனைவருக்கும் நன்கு தெரியும் இதே நிலையில் தான் தமிழ்நாடு இருக்கின்றது. ஒரு மாவட்டத்தில் ஒரு நாளைக்கு பத்து லட்ச ரூபாய் கொள்ளை என்றால் மாநிலம் முழுவதும் இருக்கக்கூடிய 37 மாவட்டத்தில் எத்தனை கோடி ரூபாய் கொள்ளைபோகிறது என்பதை மக்களே முடிவு செய்து கொள்ள வேண்டும். அந்தவகையில் ஊழலுக்கு எதிராக புதுகை வரலாறின் குரலுக்குச் செவிசாய்க்கும் வகையில் துவார் ஊராட்சி பொதுமக்கள் டாஸ்மாக்கில் நடைபெறும் முறைகேடுகளை கட்டுப்படுத்த குரல் கொடுத்துள்ளனர் அவர்களுக்கு புதுகை வரலாறு தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றது.




# இன்று





## சிந்திப்போம்.... செயல்படுவோம்

யாரும்மற்ற நிலைமையில்
உணர்வதற்கு பெயரல்ல தனிமை,
அனைத்து உறவுகளுக்கும்
மத்தியில்
ஒருவரின் பிரிவால் ஏற்படும்
உணர்விற்க்குப்
பெயர்தான் தனிமை ....



தங்கமான தெரு - நெல்லுமண்டி தெரு
ஸ்ரீ புவனேஸ்வரி ஜுவல்லர்ஸ்
3179, நெல்லுமண்டி தெரு, புதுக்கோட்டை - 622 001. போன் : 04322 222504, 222 505

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,903 | Rs.5,302 |



## வரலாற்றில் இன்று

1926 செருமனி, சோவியத் ஒன்றியம் இரண்டும் மூன்றாவது நாடு ஒன்று மற்றைய நாட்டைத் தாக்க முற்படும் போது அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு நடுநிலைமை வகிக்கும் உடன்பாடு இரு நாடுகளுக்கும் இடையே எட்டப்பட்டது.

1933 நாட்சி ஜெர்மனி யெகோவாவின் சாட்சிகள் மீதான மத ஒறுப்பை ஆரம்பித்தது.

1955 இந்தோனேசியாவின் பண்டுங் நகரில் ஆசியா, மற்றும் ஆபிரிக்காவைச் சேர்ந்த 29 அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு முடிவுற்றது. குடியேற்றவாதம், இனவாதம், மற்றும் பனிப்போர் ஆகியவற்றைக் கண்டிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1957 சூயெசு நெருக்கடி: ஐநா அமைதிப்படை தருவிக்கப்பட்டதை அடுத்து சுயஸ் கால்வாய் மீண்டும் திறக்கப்பட்டது.

1961 17ம் நூற்றாண்டைச் சேர்ந்த “வாசா” என்ற சுவீடனின் கப்பல் மீட்டெடுக்கப்பட்டது.

1964 இலங்கையில் சிங்களம் மட்டும் சட்டத்திற்கெதிராக செல்லையா கோடீஸ்வரன் என்பவர் தொடுத்த வழக்கில் இச்சட்டம் அரசியலமைப்பிற்கு முரணானது என மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பளித்தது.[1]

1965 டொமினிக்கன் குடியரசில் உள்நாட்டுப் போர் ஆரம்பித்தது.

1967 சோயூஸ் 1 விண்கலத்தில் பயணித்த உருசிய வீரர் விளாடிமிர் கொமரோவ் அவரது வான்குடை திறக்கமுடியாமல் போனதால் உயிரிழந்தார். இவரே விண்வெளிப் பயணமொன்றில் உயிரிழந்த முதலாவது வீரராவார்.

1970 காம்பியா பொதுநலவாயத்தின் கீழ் குடியரசானது. தவ்தா யவாரா அதன் முதலாவது அரசுத்தலைவரானார்.

1990 டிஸ்கவரி விண்ணோடம் ஹபிள் விண்வெளித் தொலைநோக்கியை விண்ணுக்குக் கொண்டு சென்றது.

1993 இந்தியாவில் பஞ்சாயத்து இராச்சியம் அமைக்கப்பட்டது.

1993 லண்டன் நகரில் ஐரியக் குடியரசுப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுமையுந்து குண்டுத் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டு 44 பேர் படுகாயமடைந்தனர்.

2004 ஐக்கிய அமெரிக்கா லிபியா மீது 18 ஆண்டுகளுக்கு முன்னர் விதித்த பொருளாதாரத் தடையை நீக்கியது. லிபியா பேரழிவு ஆயுதங்களை அழிக்க உடன்பட்டது.

# அரியலூர் அருகே பொய்யாத நல்லூர் ஸ்ரீ சாமுண்டீஸ்வரி அம்மன் ஆலயத்தில் அமாவாசை மிளகாய் சண்டி யாகம்



அரியலூர் மே.02-

அரியலூர் அருகே பொய்யாத நல்லூர் ஸ்ரீ சாமுண்டீஸ்வரி அம்மன் ஆலயத்தில், அமாவாசை மிளகாய் சண்டி யாகம் நடைபெற்றது.

அரியலூர் ஒன்றியம், பொய்யாத நல்லூர் கிராமத்தில் உள்ள ஸ்ரீ சாமுண்டீஸ்வரி அம்மன் ஆலயத்தில், அமாவாசையை முன்னிட்டு, மிளகாய் சண்டியாகம் சிறப்பாக நடைபெற்றது. அமாவாசையை முன்னிட்டு நடைபெற்ற சண்டியாகத்தில், வேத விற்பன்னர்கள் மந்திரங்கள் ஓத பம்பை உடுக்கை வாத்தியங்கள் முழங்க நடைபெற்ற யாக பூஜையில், ஏராளமான பக்தர்கள் பங்கேற்றனர்.

யாகத் தீயில் மிளகாய், நெய் இட்டு தங்களது நேர்த்திக்கடனை செலுத்தி பிரார்த்தனை செய்தனர். பின்னர் சுவாமிக்கு சிறப்பு அபிஷேக ஆராதனை செய்யப்பட்டன. இதில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கு.தங்கவேல் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்றார். விழாவிற்கான ஏற்பாடுகளை அடைக்கலராஜ், முத்துசாமி ஜோதிடர், கோயில் பூசாரி ஆறுமுகம் உள்ளிட்ட கிராம முக்கியஸ்தர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# 16 வயது சிறுமிக்கு நேர்ந்த கொடூரம் – லாட்ஜ் உரிமையாளர் உட்பட 3 பேர் மீது பாய்ந்த குண்டாஸ்



ஜெயங்கொண்டம் மே.02-

ஜெயங்கொண்டம் அருகே சிறுமியை பாலியல் தொழிலில் ஈடுபடுத்த காரணமாக இருந்த லாட்ஜ் மேலாளர் உட்பட 3 பேர் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டனர்.

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் அருகே உள்ள உடையார்பாளையம் பகுதியைச் சேர்ந்த 16 வயது சிறுமியை, அதே பகுதியைச் சேர்ந்த சாந்தா (30) என்பவர் வீட்டு வேலைக்காக கடந்த 3 மாதங்களுக்கு முன்பு அழைத்துச் சென்றுள்ளார். இதையடுத்து அந்த சிறுமியை மயக்க மருந்து கொடுத்து பலர் பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். இதற்கு சிலர் உடந்தையாகவும் இருந்துள்ளனர்.

இதையடுத்து பாலியல் வன்கொடுமை செய்த லாட்ஜ் உரிமையாளர் கந்தசாமி (45) என்பவரை சில நாட்களுக்கு முன்பே குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது செய்யப்பட்ட நிலையில். மேலும் இந்த வழக்கில் தொடர்புடைய உரிமையாளருக்கு உடந்தையாக இருந்த மேலாளர் தனவேல் (58), பாலச்சந்திரன் (23) மற்றும் வினோத் (29) ஆகிய 3 பேரையும் மாவட்ட ஆட்சியர் ரமண சரஸ்வதி குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்க உத்தரவிட்டுள்ளார்.



புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி ஒன்றியம் மழையூரில் கிராம சபை கூட்டம் ஊராட்சி மன்ற தலைவர் கலைச்செல்வி தர்மராஜ் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கறம்பக்குடி வேளாண்மை உதவி இயக்குனர் லூர்து ராயப்பன், மழையூர் கிராம நிர்வாக அலுவலர் சிந்து, கால்நடை மருத்துவர் முத்தழகு,ஊராட்சி செயலாளர் முருகையா மற்றும் அதிகாரிகள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# மதுரையை சேர்ந்த பள்ளி மாணவி பானை மீது நடந்தவாறு சிலம்பம் சுற்றி உலக சாதனை முயற்சி



மதுரை மே.02-

கொரோனா மற்றும் ஒமைக்ரான் அதிகமுள்ள இக்காலப்பகுதியில் தமிழக அரசு கூறியுள்ள இரண்டு தவணை தடுப்பூசி செலுத்துவதனை வலியுறுத்தியும் மற்றும் மாணவ மாணவிகள் தடுப்பூசி செலுத்துவதை வலியுறுத்தியும் 10 மணி நேரம் 4 பானை மீது நடந்தவாறு சிலம்பம் சுற்றி உலக சாதனை முயற்சி மாணவி நிவாஷினி வயது 11 ,கேந்திரிய வித்யாலயா பள்ளியில் ஆறாம் வகுப்பு மாணவி நிகழ்த்தியுள்ளார். இந்நிகழ்வினை மதுரை மாவட்ட பாஜக தலைவர் டாக்டர் சரவணன் துவக்கி வைத்தார்.

இதில் விகேஎஸ் சிலம்பம் யோகா மார்ஷியல் டிரஸ்ட் சிலம்பம் மாஸ்டர் சண்முகவேல், சோழன் உலக சாதனை புத்தக நிறுவனர் நிமலன் நீலமேகம், பாஜக ஸ்போர்ட்ஸ் மாவட்ட தலைவர் செந்தில், பாஜக துணைத் தலைவர் சுரேஷ்குமார் ஸ்போர்ட்ஸ் மாவட்ட செயலாளர் செல்வக்குமார், ஜெயபாலன், சோழன் உலக சாதனை புத்தகம் மாவட்ட பொதுச்செயலாளர் மருத்துவர் கஜேந்திரன், ரூபா பள்ளி தலைமையாசிரியர் சூரிய நாராயண மூர்த்தி, மாணவியின் பெற்றோர் கணேசன் தமிழ்நாடு காவல்துறை, சுகந்தி வாடிப்பட்டி அரசு பள்ளி ஆசிரியர் மற்றும் பத்திரிக்கையாளர் மயிலேறி உட்பட பலர் கலந்து கொண்டனர்.




## நீலகிரி மாவட்டம் பந்தலூர் அருகே

# 11ம் வகுப்பு மாணவியை கர்ப்பமாக்கிய 60 வயது முதியவர் போக்சோவில் கைது



நீலகிரி மே.02-

பந்தலூரில் 11ஆம் வகுப்பு மாணவியை 8 மாத கர்ப்பமாக்கிய 60 வயது முதியவர் போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீலகிரி மாவட்டம், பந்தலூர் அருகே உள்ள மேங்கோ ரேஞ்ச் பகுதியைச் சேர்ந்தவர் 60 வயதான முதியவர் சுதாகர். இவர் அதே பகுதியில் 11ஆம் வகுப்பு படிக்கும் மாணவியை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கி இருக்கிறார். இதில் மாணவி 8மாத கர்ப்பம் அடைந்துள்ளார்.

இந்நிலையில், பெற்றோர்கள் மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்றிருக்கின்றனர். மருத்துவர் பரிசோதித்ததில் மாணவி கர்ப்பமாக இருப்பதை அறிந்து, தேவாலா அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளனர்.

இதையடுத்து மாணவியிடம் போலீசார் நடத்திய விசாரணையில் மாணவியின் நிலைக்கு முதியவர் சுதாகர் காரணம் என தெரியவந்தது. இதனையடுத்து அவர் போக்சோ சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# கள்ளக்குறிச்சி மாவட்ட அரசு பள்ளி ஆய்வக உதவியாளர்கள் சங்கத்தின் 6–ம் ஆண்டு துவக்க விழா




கள்ளக்குறிச்சி மே.02-

கள்ளக்குறிச்சியில் அரசு பள்ளிகளில் பணிபுரியும் நேரடி நியமன ஆய்வக உதவியாளர்கள் சங்கத்தின் 6-ஆம் ஆண்டு துவக்கவிழா நடைபெற்றது.

இவ்விழா கள்ளக்குறிச்சியில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. விழாவிற்கு சங்க தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். செயலாளர் செந்தில் , பொருளாளர் குமாரி , ஒருங்கிணைப்பாளர் மதிவாணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பழனி வரவேற்புரை நிகழ்த்தினார்.

இவ்விழாவில் ஆய்வக பணியின் போது உதவியாளர்களுக்கு நிகழும் பிரச்சினைகள் குறித்தும் , பொதுத்தேர்வு சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு நல்குவது குறித்தும் , ஆய்வக உதவியாளர் நிலையில் இருந்து பதவி உயர்வு பெறுவது குறித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் 50-க்கும் மேற்பட்ட ஆய்வக உதவியாளர்கள் கலந்து கொண்டனர். இறுதியில் மகளிரணி செயலாளர் ரூபாதேவி நன்றி கூறினார்.



புதுக்கோட்டை மாவட்டம், குன்றான்டார் கோவில் ஒன்றியம், அண்டக்குளம் ஊராட்சியின் சார்பில் குறிஞ்சாம்பட்டி கிராமத்தில் தொழிலாளர் தினமான நேற்று காலை 11 மணியளவில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் ஒன்றிய கிராம சபைக் கூட்ட கண்காணிப்பு அலுவலராக மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சாமி. சத்தியமூர்த்தி கலந்து கொண்டு சிறப்பித்தார்.

# விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி அருகே கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம்



விருதுநகர் மே.02-

கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம் விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி, சித்துமூன்றடைப்பில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் வரவேற்புரை ஆரோக்கிய ரூபன்ராஜ் வட்டார மருத்துவ அலுவலர், திட்ட விளக்க உரை மரு.நா. கலுசிவலிங்கம், துணை இயக்குனர் சுகாதாரப்பணிகள் விருதுநகர் முகாமினை வாழ்த்தி பேருரை ஆற்றி தொடங்கி வைத்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் நவாஸ்கனி, வி முத்துமாரி, உமாசங்கர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர், தங்க தமிழ்வாணன் மாவட்ட கவுன்சிலர், தேவி லட்சுமி ஊராட்சி மன்ற தலைவர், ராஜேந்திரன் ஊராட்சி ஒன்றிய துணைத் தலைவர் ,நன்றியுரை நா.கருப்பையா சுகாதார ஆய்வாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்த முகாமில் 300க்கும் மேற்பட்ட கர்ப்பிணி பெண்கள் ,1000 மேற்பட்ட கிராம மக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்

# திருப்பத்தூரில் கோவில் திருவிழாவில் ஏற்பட்ட மோதலில் மருத்துவமனை வளாகத்தில் இளைஞர் ஓட ஓட வெட்டிக் கொலை



திருப்பத்தூர் மே.02-

கோவில் திருவிழாவில் ஏற்பட்ட மோதலில் இளைஞர் குத்திக் கொலைசெய்யப்பட்டார். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

திருப்பத்தூர் நகராட்சிக்கு உட்பட்ட கலைஞர்நகரைச்சேர்ந்தசில இளைஞர்களுக்கும் அருகே உள்ள டிஎம்சி காலனி பகுதியைச் சேர்ந்த சில இளைஞர்களுக்குமிடையே ஒவ்வொரு ஆண்டும் அப்பகுதியில் நடக்கும் திருவிழாவின்போது சிறு சிறு மோதல் ஏற்படுவது வழக்கம்.

இந்நிலையில் கலைஞர் நகரில் நடைபெற்ற திருவிழாவின் போது இரு தரப்பினருக்கும் இடையே மீண்டும் தகராறு ஏற்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து டிஎம்சி காலனியைச் சேர்ந்த சிலர், கலைஞர் நகரைச் சேர்ந்த அண்ணாதுரை என்பவரின் மகன் முகிலன் என்பவரை சரமாரியாக தாக்கியுள்ளனர்.

இந்த தாக்குதலில் முகிலனுக்கு ரத்த காயம் ஏற்பட்டது. உடனே முகிலனை அங்கிருந்தவர்கள் மீட்டு திருப்பத்தூர் அரசுமருத்துவ மனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றனர். ஆனால், முகிலனை பின்தொடர்ந்து சென்ற அடையாளம் தெரியாத சிலர், திருப்பத்தூர் அரசு மருத்துவமனை வளாகத்தில் முகிலனை ஓட ஓட சரமாரியாக வெட்டி படுகொலை செய்து அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

இது குறித்து தகவலறிந்த திருப்பத்தூர் நகர போலீசார், விரைந்து வந்து படுகொலை செய்யப்பட்ட முகிலனின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வேலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

# தென்காசி மாவட்டம், கடையநல்லூர் காவா அறக்கட்டளை சார்பில் 2000 ஏழைகளுக்கு ஃபித்ரா அரிசி வழங்கல்



கடையநல்லூர் மே.02-

தென்காசி மாவட்டம், கடையநல்லூரில் அனைத்து சமுதாய மக்களுக்கும் காவா அறக்கட்டளை சார்பில் அரிசி வழங்கப்பட்டது.

அறக்கட்டளைசார்பில் நடைபெற்ற விழாவிற்கு கருங்குளத்தான் சம்சுதீன் தலைமை வைத்தார். காவா டிரஸ்ட் நிர்வாகிகள் உமர் ந்தரண் ஹுசைன், மைனாரிட்டி ரஹ்மத்துல்லாஹ், செங்கோட்டையன் யாகூப் சேக் உஸ்மான், சொன்னி, முகமது அலி, பெருந்தர கன் மாலிக் துராப்கனி, ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். மௌனத் பிச்சை சாகிபு கிராத் ஓதினார்கள். சகோ ஹஸரத் சேனுறு, அக்பர் அலிம் பித்ரா அரிசி ஏழை எளியோருக்கு வழங்க வேண்டிய தன் அவசியம் குறித்து பேசினார்.

காவா ட்ரஸ்ட் செயலாளர் கலுங்கு ஜாபர் சாதிக் சிறப்பு அழைப்பாளர்கள், நிர்வாகிகள், உறுப்பினர்கள், அனைவரையும் வரவேற்றனர். காவா டிரஸ்ட் நோக்கம் அனைத்து சமுதாய மக்களும்கல்வி,மருத்துவம், பொருளாதார உதவிகள் குறித்து எடுத்துரைத்தார். மேலும் நகர்மன்ற துணைத் தலைவர் ராசையா, நகர்மன்ற உறுப்பினர்கள், கூட்டுறவு பண்டகசாலை தலைவர் முகமது அலி, மூவண்ண மசூது, மாவட்ட திமுக நெசவாளர் அணி அமைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

2000 ஏழை பயனாளிகளுக்கு 4 கிலோ அரிசி வீதம் வழங்கப்பட்டது. கௌரவத்தலைவர் மாநில மாற்றுத்திறனாளிகள் அமைப்பு துணைத் தலைவர் அப்துல் காதர், நகர்மன்ற உறுப்பினர் யாசகான், ஆகியோர் அரிசி வழங்கி சிறப்பித்தனர்.

அச்சுக் கட்டி காபூர், சேவராயன் ஜபருல்லா, கருப்ப நூப்பன், அமானுல்லாஹ், சேப் பிள்ளை, ரிஸ்க் கல்லாஹ், கொதூவுமசுது ,சகோ- மூப்பன் சாண்டோ சாகுல் ஹமீது, சொன்னி ரகுமத்துல்லாஹ், சே மர்மஸ்தான், சேப்பிள்ளைக்காதர், சொன்னிஅஸ்கார், கலீவா காதர், கம்புளிமஜீத், காவா ட்ரைவர் அக்பர், மீத்தீன் நுப்பன், ரஹ்மத்துல்லாஹ், மேத்தன் ஹனிபா, சொன்னி இப்ராஹிம், கலந்தரிஉனைஸ், உட்பட அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இறுதியில் காவா ட்ரஸ்ட் செயலாளர் கலுங்குஜாபர் சாதிக், நன்றி கூறி நிறைவு செய்தார்.



▶ புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், ராயவரம் ஊராட்சியில் நடைபெற்ற மே1 கிராமசபை கூட்டத்தில் சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி நேற்று கலந்து கொண்டார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் கருப்பசாமி, தனி மாவட்ட வருவாய் அலுவலர் [தேசிய நெடுஞ்சாலை நிலம் எடுப்பு] சரவணன், அரிமளம் ஒன்றிய குழு தலைவர் மேகலா முத்து, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் கலைவாணி சுப்பிரமணியன், ஒன்றிய குழு உறுப்பினர் ரேகா கிருஷ்ணன், ஊராட்சி மன்ற தலைவர் கலைச்செல்வி மீனா, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தனியார் வேலை – வாய்ப்பு முகாம் அமைச்சர் துவக்கி வைத்தார்



நாகப்பட்டினம்,மே.2-

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றிய அளவில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு திட்டம், தமிழ்நாடு ஊரக,நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் தனியார் நிறுவனங்களின் வேலைவாய்ப்பு முகாம் திட்டச்சேரி அரசினர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது.நிகழ்ச்சிக்கு நாகைமாவட்ட கலெக்டர் அருண் தம்புராஜ் தலைமை தாங்கினார்.

தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் கௌதமன், முகமது ஷாநவாஸ் எம்எல்ஏ ஆகியோர் முன்னிலை வகித்தனர்.இந்நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் மாசுகட்டுப்பாடு காலநிலை மாற்றத்துறை, இளைஞர் நலன் விளையாட்டுமேம்பாட்டு துறை அமைச்சர் வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றிமுகாமை துவக்கி வைத்தார்.

முகாமில் கலந்துகொண்டு வேலைவாய்ப்பிற்குதேர்வு செய்யப்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பு சான்றிதழ்களையும் வழங்கினார் நிகழ்ச்சிகள். இந்நிகழ்ச்சியில் திட்டச்சேரி பேரூராட்சி செயல் அலுவலர் கண்ணன், திருமருகல் வட்டார ஆத்மா குழு தலைவர் செல்வ செங்குட்டுவன், திட்டச்சேரி பேரூராட்சி மன்ற தலைவர் ஆயிஷா சித்திக்கா மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# மதுராந்தகத்தில் இருசக்கர வாகன பழுது நீக்குவோர் நல சங்கத்தின் மேதின விழா



செங்கல்பட்ட ,மே.2-

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வட்டார இருசக்கர மோட்டார் வாகனம் பழுது நீக்குவோர் நல சங்கத்தின் சார்பில் மே தின விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு சங்க தலைவர் ஏ.ஏழுமலை தலைமை தாங்கினார். செயலாளர் ஆர். சரவணன் வரவேற்றார்.

மாவட்ட உதவி காவல் கண்காணிப்பாளர் கிரண் சுருதி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். மதுராந்தகம் பேருந்து நிலையம் எதிரே உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்தனர். மதுராந்தகம் கோட்டத்தில் உள்ள காவல் நிலையங்களுக்கு ரூபாய் 80 ஆயிரம் மதிப்புள்ள 8 சாலை பாதுகாப்பு தடுப்புகளை மாவட்ட உதவி காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதியிடம் வழங்கினர். மேலும், சங்கத்தின் சார்பில் ரூபாய் 30 ஆயிரம் மதிப்பில் 30 தலைக் கவசங்களை பொதுமக்களுக்கு வழங்கினார்.

அதன் பின்னர், தலைக்கவசம் குறித்த விழிப்புணர்வு ஊர்வலத்தை மாவட்ட ஏ.எஸ்.பி.கிரண் சுருதி தொடங்கி வைத்தார். விழிப்புணர்வு மோட்டார் சைக்கிள் ஊர்வலம் ஜிஎஸ்டி சாலை, தேரடி வீதி,சூனாம்பேடு சாலை, ஹாஸ்பிடல் சாலை வழியாக வந்து மீண்டும் பேருந்து நிலையத்தின் முன்பு ஊர்வலம் நிறைவடைந்தது.

இதனை தொடர்ந்து மதுராந்தகம் போக்குவரத்து காவல் ஆய்வாளர் நாகராஜன் வாழ்த்துரை வழங்கினார். மோட்டல் நிறுவன மேலாளர் ஞானசேகரன் சார்பில் இரண்டு சக்கர மோட்டார் வாகன பழுது நீக்கும் நல சங்க நிர்வாகிகளுக்கு மே தின வாழ்த்து செய்தியை தெரிவித்தனர். முடிவில் சங்க பொருளாளர் பி.கோவிந்தன் நன்றி கூறினார்.

# அறந்தாங்கி இஸ்லாமிய மன்றம் சார்பில் மதநல்லிணக்க இஃப்தார்



அறந்தாங்கி,மே.2:

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி இஸ்லாமிய மன்றம் சார்பில் மதநல்லிணக்க இஃப்தார் விருந்தில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எம். அப்துல்லாஹ் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் எஸ். டி.ராமசந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அறந்தாங்கி இஸ்லாமிய மன்றம் சார்பில் மதநல்லிணக்க இஃப்தார் எனும் நோன்பு திறப்பு விருந்து நடைபெற்றது.

இம்மன்றத்தின் தலைவர் டி.என்.ஏ.பீர் சேக் தலைமையில் ஜமாஅத் தலைவர். ஹாஜி.எஸ்.என். சேக்அப்துல்லாஹ், ஜமாஅத் முத்தவல்லி எஸ்.முகமது சரீபு,மன்ற செயலாளர் எஸ். ராஜா முகமது, நகர் மன்ற உறுப்பினர் என்.எஸ்.தீன் ஆகியோ முன்னிலையில் பள்ளிவாசல் இமாம் கே.மீரான்கனி இம்தாதி இறைவசனம் ஓதி துவங்கிவைத்தார். இம்மன்றத்தின் கௌரவத்தலைவர் பசீர்அலி அனைவரையும் வரவேற்றார். மாநிலங்கள் அவை உறுப்பினர் எம்.எம். அப்துல்லாஹ், அறந்தாங்கி சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.டி.ராமச்சந்திரன், நகர் மன்ற தலைவர் இரா. ஆனந்த், துணைத் தலைவர் த. முத்து, மணமேல்குடி துணை பெருந்தலைவர் சீனியார், காவல்துறை துணை கண்காணிப்பாளர் தினேஷ்குமார், கோட்டாட்சியர் சொர்ணராஜ், நகராட்சி ஆணையாளர் தோ.லீனாசைமன், நகராட்சி பொறியாளர் திருட்செல்வம், மனிதநேய ஜனநாயக கட்சி மாவட்ட செயலாளர் முனைவர் முபாரக் அலி, நகர் மன்ற உறுப்பினர்கள் மகாராணி அஜ்மீர், ரேனுகா ராசு, விஸ்வமூர்த்தி,யாசர் அகமது, அசாருதீன், தமிழ்நாடு பிச்சை, செலக்ஸன் சுரேஷ் குமார், ரோட்டரி சங்க தலைவர் பிஸ்மி எஸ். முபாரக், வர்த்தக சங்க தலைவர் எஸ்.காமராஜ், தாலிப் ஜூவல்லர்ஸ் ஏ.அப்துல் முத்தலிபு, எம்.எஸ். பாலிடெக்னிக் கனி முகம்மது, எம்.ஆர்.திருமண மண்டபம் ஜே.மைதீன்,எஸ்.எப்.டி தாளாளர் கனி உள்ளிட்ட சிறப்பு விருந்தினர்கள் கலந்துகொண்டனர்.

வருவாய்த்துறை எஸ். ஜபருல்லா நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். இறுதியில் ஏ.லியாகத் அலி அனைவருக்கும் நன்றி கூறினார்.முன்னதாக ஏராளமான ஏழை எளியோருக்கு ரமலான் அன்பளிப்பு இம்மன்றத்தின் சார்பில் வழங்கப்பட்டன.









▶ மே1 தொழிலாளர் தினத்தை முன்னிட்டு திருவள்ளூர் மாவட்டம் சோழவரம் ஒன்றியம் ஆங்காடு ஊராட்சியில் கிராம சபை கூட்டம் ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. இதில் ஊராட்சி மன்ற தலைவர் கிரிஜா நித்யானந்தம் தலைமையில் நடைபெற்றது.இதில் மாவட்ட கவுன்சிலர் கீதா அரசு, ஒன்றிய குழு உறுப்பினர் விஜயலட்சுமி வெங்கடேசன், ஆங்காடு ஊராட்சி துணைத்தலைவர் மதன் ராஜ் மற்றும் ஊராட்சி செயலர் காமேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.இதில் வார்டு உறுப்பினர்கள் விமலா,செல்வி, சங்கர், சுமதி, ஈஸ்வரி ரஞ்சிதா, வெங்கடேசன், குணசுந்தரி மற்றும் கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்

# விஜய் மக்கள் இயக்கம் சார்பாக தண்ணீர் பந்தல் திறப்பு விழா



▶ செங்கல்பட்டு மாவட்ட இலத்தூர் ஒன்றியம் விஜய் மக்கள் இயக்கம் சார்பாக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாநில பொதுச்செயலாளர் புஸ்ஸி.ஆனந்த் வழிகாட்டுதலின்படி செங்கல்பட்டு மாவட்ட தலைவர் செங்கை சூரியநாராயணன் மேற்பார்வையில் இலத்தூர் ஒன்றியம் மடயம்பாக்கம் கிராமத்தில் நடைபெற்றது கோடைக்கால நீர் மோர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் மோர்,தர்பூசணி,கூல்ரிங்ஸ் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சி ஏற்பாடு மடையம்பாக்கம் தளபதி ர.கோகுல் மடையம்பாக்கம் கி.டில்லிபாபு மற்றும் மடையம்பாக்கம் நிர்வாகிகள் பொதுமக்கள் மாணவ செல்வங்கள் கலந்து கொண்டனர்



▶ திருவள்ளூர் அருகே மேல்நல்லாத்தூர் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபா கூட்டத்தில் ஆத்திரமடைந்த துணைத் தலைவர் வார்டு உறுப்பினர்கள் தீர்மானங்கள் சரியில்லாத காரணத்தால் ஆவணங்களை கிழித்து எறிந்தனர் இதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது சம்பவத்தை அறிந்த காவல்துறை கண்காணிப்பாளர் சந்திரகாசன் பார்வையிட்டு பலத்த போலீஸ் பாதுகாப்பு அளித்தனர்



▶ ராணிப்பேட்டையில் இமைகள் அறக்கட்டளை சார்பாக ரமலான் நோன்பு திறக்கும் நிகழ்ச்சிகள் மற்றும் சிறப்பு பரிசுகள் வழங்கும் விழா நடந்தது இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்கள் கொண்டவர்கள் தமிழ்நாடு வக்பு வாரியம் முத்தவல்லி சென்னை எஸ்.சையத் அலி அக்பர், ராணிப்பேட்டை மாவட்டம் மாவட்ட ஆட்சியர் டி.பாஸ்கர பாண்டியன் எஸ்.ஆர்.பி தேவி பென்ஸ்பாண்டியன், தமிழ்நாடு சுன்னத் ஜமாத் மாநில செயலாளர் எஸ்.எஸ்.பாரூக் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள் இமைகள் அறக்கட்டளை நிறுவனத்தலைவர் ஆர்.சையத் பாரூக் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.



▶ திருவள்ளூர் அருகே பிரைட் மேல்நல்லாத்தூர் சேவா அறக்கட்டளை சார்பில் சாலையோரம் வசிக்கும் ஆதரவற்ற மக்களுக்கு தினந்தோறும் உணவளிக்கும் திட்டம் நேற்று துவங்கப்பட்டது.பின்னர் சாலையோர மக்களுக்கு மதிய உணவு வழங்கினார்கள்

# செம்பனார்கோயில் அறிஞர் அண்ணா மண்டபத்தில் மே தின சிறப்பு கிராம சபை கூட்டம் மாவட்ட ஆட்சியர், பூம்புகார் எம்எல்ஏ பங்கேற்பு





மயிலாடுதுறை ,மே.2-

மயிலாடுதுறை மாவட்டம். செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றியம், செம்பனார்கோயில் கிராம ஊராட்சி அறிஞர் அண்ணா மண்டபத்தில், மே 1 தொழிலாளர் தினத்தையொட்டி செம்பனார்கோயில் ஊராட்சி மன்ற தலைவர் க.தி. விஸ்வநாதன் தலைமையில் நடைபெற்ற சிறப்பு கிராம சபை கூட்டத்தில் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும், நாகை வடக்கு மாவட்ட திமுக பொறுப்பாளருமான நிவேதா எம்.முருகன் முன்னிலையில், சிறப்பு பார்வையாளராக மாவட்ட ஆட்சியர் இரா.லலிதா கலந்து கொண்டார்.

இக்கிராம சபை கூட்டத்தில் சிறப்பு பார்வையாளராக மாவட்ட ஆட்சித் தலைவர் கலந்துக் கொண்டு பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அணைக்கிணங்க இச்சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெறுகின்றது. ஆண்டுக்கு நான்கு முறை கிராமசபை கூட்டம் நடைபெற்று வந்ததை, ஆறு முறையாக மாற்றி நடத்திட நம்முடைய முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார். அதாவது ஜனவரி 26 குடியரசு தினம், மே 1 தொழிலாளர் தினம், ஆகஸ்ட் 15 சுதந்திர தினம், அக்டோபர் – 2 அண்ணல் காந்தியடிகள் பிறந்த தினம் ஆகிய நாட்களில் நடைபெறும். வரக்கூடிய 4 கிராம சபை கூட்டம், இனி வருடத்திற்க்கு 6 கிராம சபை கூட்டங்களாக நடத்தப்படும். அந்த வகையில் மயிலாடுதுறை மாவட்டத்தில் 241 கிராம ஊராட்சிகளிலும் கிராம சபை கூட்டம் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தின் வாயிலாக 16விதமான கூட்டப்பொருள்கள் கிராம பொது மக்களின் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கிராம சபை கூட்டங்களின் முக்கியநோக்கம் ஊராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி பணிகள் குறித்து மக்கள் அறிந்து கொள்ள நடத்தப்படுகிறது. சாலை வசதிகள், குடிநீர், மின் இணைப்பு, கழிப்பறை வசதிகள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் வரப்பெறும் புகார்கள் மற்றும் கோரிக்கைளுக்கு தீர்வு காணுதல், பள்ளி கட்டடங்கள் போன்றவைகள் குறித்து நன்றாக அறிந்துக் கொள்ளலாம்.

பொது மக்களின் கோரிக்கைகள் விவாதிக்கப்பட்டு விரைந்து நிறைவேற்றி தர நடவடிக்கைகள் எடுக்கப்படும். மகளிர் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மகளிர் சுய உதவிக் குழு உருவாக்கப்பட்டது மகளிர் சுய உதவிக்குழுவில் இணைந்து தொழில் தொடங்க, தாட்கோ, வாழ்ந்து காட்டுவோம் போன்ற எண்ணற்ற திட்டங்களில் சேர்ந்து பயன்பெற வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சியர் பேசினார்.

இக்கிராமசபை கூட்டத்தில் ஊரக வளர்ச்சி, ஊராட்சிதுறை இணை இயக்குநர் எஸ்.முருகண்ணன், செம்பனார்கோயில் ஒன்றியக்குழு தலைவர் நந்தினி ஸ்ரீதர், ஒன்றியக்குழு துணைத்தலைவர் பி.பாஸ்கரன், மகளிர் திட்ட இயக்குநர்/இணை இயக்குநர் கவிதபிரியா, வேளாண்மைத்துறை இணை இயக்குநர் சேகர், சீர்காழி வருவாய் கோட்டாட்சியர் நாராயணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மஞ்சுளா, ஜெ.விஜயலட்சுமி, தரங்கம்பாடி வட்ட வழங்கல் அலுவலர் பாபு மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கிராம மக்கள் ஆர்வமுடன் பங்கேற்ற சிறப்பு கிராம சபை கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முடிவில் மாவட்ட ஆட்சியர் இரா. லலிதா, பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன் ஆகியோர் கிராம பொது மக்களின் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டனர்.



▶ தமிழக முதல்வர் உத்தரவின்படி திமுக சென்னை வடக்கு மாவட்ட செயலாளர் மற்றும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் மாதவரம் எஸ்.சுதர்சனம் ஆலோசனைப்படி மே -1 உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு சுத்தமாகவும் தூய்மையாகவும் வைத்துக்கொள்ளும் துப்புரவு பணியாளர்களுக்கு. சென்னை பெருநகர மாநகராட்சி 27 வது வட்ட மாமன்ற உறுப்பினர் ஏ.சந்திரன் இனிப்பு மற்றும் பொன்னாடை வழங்கினார் மரியாதை செலுத்தி ஊக்கப்படுத்தி வாழ்த்துகள் தெரிவித்தார்

# லத்தூர் ஊராட்சி மன்ற தலைவருக்கு குவியும் பாராட்டு



செங்கல்பட்டு ,மே.2-

செங்கல்பட்டு மாவட்டம் இலத்தூர் ஊராட்சியில் புதிதாக தலைவர் பதவிஏற்ற குமாரி நாகராஜன் பொறுப்பேற்ற ஆறு மாதத்தில் பல்வேறுதிட்டங்களை நிறைவேற்றியுள்ளார் அவரை பொதுமக்கள் பாராட்டி வருகின்றனர் கிராமத்தில் நலத்திட்டங்கள் சிலகுடிநீர் பிரச்சனை, தெரு விளக்கு பிரச்னை உடனடியாக சரி செய்யப்பட்டது மழை காலங்களில் நீர் தேங்காமல் இருக்க அனைத்து கால்வாய்களும் தூர்வாரி சீராமைக்கப்பட்டது.

மேலும் 30 நபர்களுக்கு இலவசவீட்டுமனைபட்டா வழங்கபட்டுள்ளது மற்றும் மக்களை தேடி மருத்துவ முகாம், இல்லம் தேடி கல்வி இவையெல்லாம் செய்து தரப்பட்டுள்ளது, 2 ஓ எஸ் டி டேங்க் அமைக்கப்பட்டுள்ளது நமது கிராமத்திற்கு பேருந்து வசதி ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, இலத்தூர் குளக்கரையில் பூங்கா அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது, அகரம் கிராமத்தில் நியாயவிலை கடை புதிதாக அமைக்கப்பட உள்ளது, அகரம் அங்கன்வாடி கட்டிடம் சரி செய்யப்பட்டுள்ளது.

கிராம நிர்வாக அலுவலகம் நமது கிராமத்தில் கொண்டுவரப் பட்டுள்ளது மேலும் வேறு இடத்திற்கு மாற்றம் செய்ய இருந்த நமது கிராம தபால் நிலையத்தை நமது ஊராட்சி சேவை மைய கட்டிடத்திலேயே இயங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது கடந்த ஆறு மாதத்தில் 15 கொரோனா முகாம் நடத்தப்பட்டுள்ளது, மே 1 நடைபெற்ற கிராம சபைகூட்டத்தில் சமுதாய கூடம் கட்டுவது மற்றும் பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இந்த கூட்டத்தில் பாற்றாளராக திரு சுரேஷ் அவர்களும், ஊராட்சி செயலர்,துணைத்தலைவர், வார்டு உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டனர் தலைவரின் இந்த துரித செயல்பாடுகளை பாராட்டி பொது மக்களும் இளைஞர்களும் வாழ்த்துக்கள் தெரிவித்தார்கள்.

# புதுக்கோட்டையில் 68 வயது மூதாட்டியை கற்பழித்து கொலை செய்தவர் மீது குண்டர் தடுப்பு சட்டம்



புதுக்கோட்டை ,மே.2-

புதுக்கோட்டையில் 68 வயது மூதாட்டியை கற்பழித்து கொலை செய்த வழக்கில் சம்பந்தப்பட்ட இரண்டாவது குற்றவாளி சிவா என்ற ஜீவானந்தம் மீது குண்டர் தடுப்பு சட்டம் பாய்ந்தது.

புதுக்கோட்டை நகர காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதியான பழைய அரசு மருத்துவமனை வளாகத்திற்குள் வசித்துவந்த கருப்பையா மகள் 68 வயதான நாகரெத்தினம் என்பவரை கடந்த ஜனவரி 19ஆம் தேதி கற்பழித்து கொலை செய்தது சம்பந்தமாக வழக்கு விசாரணை செய்யப்பட்டு குற்றவாளிகள் கைது செய்யப்பட்ட நிலையில் முதல் குற்றவாளியான வீரராசு மீது ஏப்ரல் 30ஆம் தேதி சனிக்கிழமை குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கைஎடுக்கப்பட்ட நிலையில் இரண்டாவது குற்றவாளியான தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுக்கா, ஊரணிபுரம் பெரமன் மகன் சிவா என்ற ஜீவானந்தம் மீது புதுக்கோட்டை எஸ்பி நிஷா பார்த்திபன் பரிந்துரையின்பேரில் கலெக்டர் கவிதா ராமு உத்தரவின்படி நேற்று மே 1ஆம் தேதி குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு குற்றவாளி திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

ஜனவரி மாதம் புதுக்கோட்டையில் பெரும் அதிர்ச்சியையும் அதிர்வலையும் ஏற்படுத்தி இருந்த அறுபத்தி எட்டு வயது மூதாட்டி கொலை வழக்கு தொடர்பாக இரண்டு குற்றவாளிகள் உடனடியாக கைது செய்யப்பட்டு அவர்கள் மீது குண்டர் தடுப்பு சட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுஇருப்பதற்கு பொதுமக்கள் வரவேற்பு தெரிவித்துள்ளார்.

# குடுமியான்மலை வேளாண் கல்லூரியில் தீ தடுப்பு செயல் விளக்கம்



புதுக்கோட்டை மே.02-

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், குடுமியான்மலை வேளாண்மை கல்லூரியில் தீயினால் ஏற்படும் விளைவு மற்றும் அதிலிருந்து பாதுகாக்க பயன்படுத்தப்படும் வழிமுறை பற்றிய செயல்முறை விளக்க நிகழ்வு நடைபெற்றது.

இதில் மாவட்ட அலுவலர் உத்தரவின்படி, புதுக்கோட்டை மாவட்ட தீத்தடுப்பு குழு சார்பு நிலை அலுவலர் செல்வராஜ் தலைமையேற்று நடத்தினார். இதில் முன்னணி தீயணைப்பாளர் ஜான், ராஜசேகர் ஆகியோர் பங்கேற்றனர். இதில் கல்லூரி முதல்வர் செங்குட்டுவன் பங்கேற்றார்.

நிகழ்வில் தீயிலிருந்து பாதுகாக்கும் வழிமுறைகளை வழங்கிய பின் அதற்கான செயல்முறைகளும் செய்து காட்டப்பட்டது. மேலும் இடிபாடுகளில் சிக்கி காயமடைந்தவர்களை மீட்கும் வழிமுறைகளை செயல்முறையுடன் விளக்கினார்கள் அதனை மாணவர்கள் ஆர்வத்துடன் கேட்டறிந்தனர்.

# மே தினத்தை முன்னிட்டு எழுநூற்றிமங்களத்தில் கிராம சபை கூட்டம்



ஆவுடையார்கோவில் மே.02-

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோவில் தாலுகா, புண்ணியவயல் ஊராட்சியில் உள்ள எழுநூற்றி மங்கலம் கிராமத்தில் மே தினத்தை முன்னிட்டு நேற்று காலை 10 மணி அளவில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு ஊராட்சி மன்ற தலைவர் சுரேஷ் தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் ஆவுடையார் கோவில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சிவக்குமார் கலந்து கொண்டார். கூட்டத்தில் 100 நாள் வேலை சம்பந்தமாகவும் திடக்கழிவு மேலாண்மை செய்வது சம்பந்தமாகவும், திரவ கழிவு மேலாண்மை சம்பந்தமாகவும், ஊராட்சியில் பிளாஸ்டிக் பொருள் தவிர்ப்பது சம்பந்தமாகவும் புண்ணிய வயல் ஊராட்சியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற திட்டப்பணிகள் சம்பந்தமாகவும் விவாதிக்கப்பட்டது. கூட்டத்தில் காளிமுத்து, பிரேமலதா, புஷ்பவல்லி, பெரியசாமி, மாரிமுத்து, மணிமேகலை, மாரியப்பன், பிரகாஷ் ஆகிய பஞ்சாயத்து வார்டு உறுப்பினர்களும் ஊராட்சி துணைத்தலைவர் ரஞ்சிதா பாண்டி மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 9பி நத்தம் பண்ணையில் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டம்



புதுக்கோட்டை மே.02-

புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 9பி நத்தம் பண்ணையில் மே 1 தொழிலாளர் தினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டம் ஊராட்சி மன்ற தலைவர் சுசீலா சேதுராமன் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு ஊராட்சி ஒன்றிய ஆணையர் குமாரவேலன் முன்னிலை வகித்தார்.

சிறப்பு அழைப்பாளராக ஒன்றியக்குழு பெருந்தலைவர் சின்னையா கலந்து கொண்டார். இந்த கிராம சபை கூட்டத்தில் பல்வேறு பொருள்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. அவை கிராம ஊராட்சி நிர்வாகம், பொது நிதி செலவினம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தியை தடை செய்தல், தூய்மை பாரத இயக்கம், ஜல் ஜீவன் திட்டம், வேளாண்மை உழவர் நலத்துறை நமக்கு நாமே திட்டம் மகளிர் திட்டம், முதியோர் உதவித்தொகை, விவசாயிகள் கடன் அட்டை உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் குறித்து விவாதிக்கப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இந்த கூட்டத்தில் ஊராட்சி மன்ற துணை தலைவர் பாப்பாத்தி, பற்றாளர் ஆனந்தவல்லி உதவி வேளாண்மை அலுவலர் செல்வி, திவ்யா, கிராம நிர்வாக அலுவலர் பீத்ரேனா, சுகாதாரத்துறை அலுவலர் எம். முத்தன் உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சார்ந்த அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



▶ புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், குப்பகுடி ஊராட்சியில் நேற்று நடைபெற்ற மே 1 கிராம சபைக் கூட்டத்தில் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் கலந்து கொண்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, வருவாய் கோட்டாட்சியர் சொர்ணராஜ், திருவரங்குளம் ஒன்றிய குழுத்தலைவர் வள்ளியம்மை தங்கமணி, ஊராட்சி மன்ற தலைவர் இளங்கோ, வட்டார வளர்ச்சி அலுவலர் ஆஷாராணி, வட்டாட்சியர் பெரியநாயகி, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



▶ புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், திருவரங்குளம் ஊராட்சியில் நடைபெற்ற மே 1 கிராம சபை கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் கவிதா ராமு கலந்து கொண்டார். உடன் தனி மாவட்ட வருவாய் அலுவலர் [காவேரி வைகை குண்டாறு] ரம்யா தேவி, திருவரங்குளம் ஒன்றிய குழுத்தலைவர் வள்ளியம்மை தங்கமணி, உதவி இயக்குனர் ஊராட்சிகள் சுருதி, வட்டார வளர்ச்சி அலுவலர் கோகுலகிருஷ்ணன், ஊராட்சி மன்ற தலைவர் மகேஸ்வரி உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தயாரிப்பு விலையில்... தங்க நகைகள்...!
ஸ்ரீ பார்வதி'ஸ் ஜீவல்லர்ஸ்
தங்க நகை தயாரிப்பு கூடம்
TS.NO.3208 கீழராஜ வீதி,
புதுக்கோட்டை – 1.
தொடர்புக்கு : 98433 07916, 04322 – 233544.

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,903 | Rs.5,302 |


# அரிமளம் அருகே மிரட்டுநிலை ஊராட்சியில் மே தின கிராம சபை கூட்டம்



அரிமளம், மே.02-

புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஒன்றியம், மிரட்டுநிலை ஊராட்சியில் மேதினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டம் சிறப்பாக நடைபெற்றது.

இதில் ஊராட்சி மன்ற தலைவர் ம.வீரமணி மருதமுத்து தலைமையில், பற்றாளராக துணை வட்டார வளர்ச்சி அலுவலர் துரைராஜ் கலந்து கொண்டார். இதில் கடந்தாண்டு வரவு-செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஊராட்சி மக்கள் பயன் பெறும் வண்ணம் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் துணை தலைவர் குணசேகரன், கிராம நிர்வாக அலுவலர் அகிலா, வார்டு உறுப்பினர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், நியாயவிலை கடை அலுவலர்கள் மற்றும் பொதுமக்களும் அரசியல் கட்சி பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.



▶ நேற்று தனது பிறந்தநாளை கொண்டாடிய திமுக மாநில சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினரும் புதுக்கோட்டை மாவட்ட கலைஞர் தமிழ்ச் சங்கத்தின் செயலாளருமான சந்திரசேகரனுக்கு மாவட்ட மருத்துவ அணி துணை அமைப்பாளர் டாக்டர் முத்துக்கருப்பன் நினைவு பரிசு வழங்கி வாழ்த்திய போது எடுத்த படம் அருகில் மாநில மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் அரு வீரமணி, ராமகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



▶ அகில இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழக முகவர்கள் சங்கம் சார்பில் புதுக்கோட்டை எல்.ஐ.சி அலுவலக வாயிலில் மே தினம் கொண்டாடப்பட்டது. சங்கத்தின் தலைவர் கே.என்.கே.ஆறுமுகம் கொடியேற்றி வைத்து தலைமையுரையாற்றினார். கௌரவத் தலைவர் ஜி.தங்கவேல் மற்றும் அமைப்புச் செயலாளர் ஜி.வேணுக்கோபால் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தேசிய செயற்குழு உறுப்பினர் எம்.சங்கர் மற்றும் பொருளாளர் ஏ.பானுமதி ஆகியோர்பொது மக்களுக்கு இனிப்பு வழங்கினர். செயலாளர் டி.மதியழகன் நன்றியுரை வழங்க விழா நிறைவுபெற்றது.

# அரிமளம் அருகே சீகம்பட்டியில் அரசு பள்ளி மேலாண்மை குழு நிர்வாகிகள் தேர்வு கூட்டம்



அரிமளம் மே.02-

புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஒன்றியம், ஓணாங்குடி ஊராட்சி சீகம்பட்டி ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளியில், பள்ளி மேலாண்மைகுழு கூட்டம் நடைபெற்றது.

பள்ளியின் தலைமை ஆசிரியர் அ.சகாய செல்வி அனைவரையும் வரவேற்றார். பள்ளி மேலாண்மை குழு தலைவராக சுந்தரவள்ளியும், துணைத்தலைவராக அம்பிகாவும், வார்டு உறுப்பினர்கள் அன்னக்கிளியும், செல்வ பிரியாவும் பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். சிறப்பு அழைப்பாளராக ஓணாங்குடி ஊராட்சி மன்ற தலைவர் கருமுருகேசன் கலந்து கொண்டார்.

மேலும் சிறப்பு பார்வையாளராக கடையக்குடி ஆங்கில பட்டதாரி ஆசிரியர் திருவெங்கட சுப்பிரமணியன் கலந்து கொண்டார். இறுதியில் பள்ளியின் இடைநிலை ஆசிரியர் வெ.செல்வம் நன்றி கூறினார்.

# ஆதனக்கோட்டை ஊராட்சியில் உஜ்வாலா தினம் கொண்டாட்டம்



ஆதனக்கோட்டை, மே.02-

ஸ்ரீசிந்தாமணிகணபதி கேஸ் சப்ளையர்ஸ் சார்பில் உஜ்வாலாதினம்மே ஒன்றாம் தேதியான நேற்று ஆதனக்கோட்டை ஊராட்சியில் மிகவிமரிசையாக கொண்டாடப்பட்டது.

வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ள ஒவ்வொரு குடும்பத்துக்கும் இலவச எரிவாயு இணைப்புவழங்கி சமூகத்தில் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை காணும் நடவடிக்கையாக பிரதமரின் உஜ்வாலா திட்டம்உள்ளது. கடந்த 2016 ஆம் ஆண்டு மே 1ஆம்தேதி பிரதமர் மோடியால் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த தினத்தை உஜ்ஜவால தினமாக ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றனர்.

ஆதனக்கோட்டை ஊராட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆதனக்கோட்டை ஊராட்சிமன்ற தலைவர் கண்ணன் தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சியில் 400க்கும் அதிகமானோர் கலந்துக்கொண்டனர். 1906 இன்முக்கியத்துவம் வாடிக்கையாளர்களுக்கு விளக்கப்பட்டது. நிகழ்ச்சியில், எரிவாயுவை எவ்வாறு பாதுகாப்பாகவும் சிக்கனமாகவும் உபயோகப்படுத்துவது குறித்த செயல்முறை விளக்கங்களை ஸ்ரீசிந்தாமணிகணபதி சப்ளையர்ஸ் சனந்தனன் வழங்கினார். வாடிக்கையாளர்கள் தங்கள் அனுபவங்களை பகிர்ந்துகொண்டனர்.

முத்துலட்சுமி ரவிச்சந்திரன் கூறுகையில், 4 ஆண்டுகளுக்குமுன்புவி றகுகளைபயன்படுத்தியதாக வும், அதன்காரணமாகதனக் குகண்பார்வைபிரச்சனைஇ ருந்ததாகவும், எல்பிஜி க்கு மாறியபிறகுமெதுவாகஇதிலி ருந்துமீண்டுவருவதாகவும் கூறினார். சீதாவிஜயகுமார் கூறுகையில், சமையலுக்கு விறகுகளைபயன்படுத்தும் போதுதினமும்தாமதமாகவே லைக்குசெல்வேன்.

இப்போது எல்பிஜியைப் பயன்படுத்தத் தொடங்கிய பிறகு, நான் சீக்கிரமாகச்செல்கிறேன், மேலும்வேலைக்காகஎன துமுதலாளியிடமிருந்துபா ராட்டுகளைப்பெறுகிறேன். உஜ்வாலா பயனர்களின் அனுபவங்களைக் கேட்கும் போது அதுஒருஉணர்ச்சி கரமான தருணமாக இருந்தது. இன்னும்உ ஜ்வாலாஇணைப்புகள் பெறாதபயனாளிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டன. நிகழ்ச்சியி ல்கலந்துகொண்டஅனைவ ருக்கும்இனிப்புகள்வழங்க ப்பட்டது.

# தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் திடல் இலக்கிய கூடலின் சார்பில் ஆவணப்பட வெளியீட்டு விழா



புதுக்கோட்டை மே.02-

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் திடல் இலக்கிய கூடலின் சார்பில் ஆவணப்பட வெளியீட்டு விழா புதுக்கோட்டை அறிவியல் இயக்க கூட்ட அரங்கில் நேற்று நடைபெற்றது.

விழாவிற்கு தமுஎகச மாவட்டத் தலைவர் எம்.ஸ்டாலின் சரவணன் தலைமை வகித்தார். செயலாளர் சு.மதியழகன் வரவேற்றார். விழாவில் கலந்து கொண்டு 'ட்ரீம் ஆப் ஒலிம்பிக்;' என்ற ஆவணப்படத்தை வெளியிட்டு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் சிறப்புரையாற்றினார். கவிஞர்கள் நா.முத்துநிலவன், தங்கம்மூர்த்தி, ஜீவி ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

விழாவில் கவிநாடு இளைஞர் விளையாட்டு மன்றத் தலைவர் பிவிஆர். சேகரன், பயிற்சியாளர் எஸ்.லோகநாதன், ஆவணப்பட இயக்குனர்கள் ராஜூ மாரியப்பன், சிவ.சித்திரைச்செல்வன் ஆகியோர் கவுரவிக்கப்பட்டனர். ட்ரீம் ஆப் ஒலிம்பிக் மற்றும் நாடோடி ஆகிய ஆவணப்படங்கள் திரையிடப்பட்டன. திரைப்படங்கள் குறித்து எஸ்.இளங்கோ, கி.ஜெயபாலன், ஆர்.நீலா, துரை.அரிபாஸ்கர், அ.மணவாளன் உள்ளிட்டோர் பேசினர். முடிவில் புதுகை கிளைச் செயலாளர் சு.பீர்முகமது நன்றி கூறினார்.



▶ புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், சம்பட்டி விடுதி ஊராட்சி, சேவுகன்பட்டியில் தொழிலாளர் தின கிராமசபை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் கிராம ஊராட்சி நிர்வாக வரவு செலவு விவாதத்திலும், ஊராட்சி வளர்ச்சியிலும் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றதாகவும் அதுகுறித்து தெரிய வந்தபோது கிராம ஊராட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள், ஊராட்சி மன்ற தலைவர் ராஜேஸ்வரி சின்னத்துரை மற்றும் ஊராட்சி செயலாளர் மாணிக்கம் ஆகியோரிடம் முறையான வரவு செலவு கணக்குகளை ஒப்படைக்குமாறு கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் கிராமசபை கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது.

# தென்காசி மாவட்டம், கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சொக்கம்பட்டியில் கிராம சபை கூட்டம்



தென்காசி மே.02-

தென்காசி மாவட்டம், கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சொக்கம்பட்டியில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது.

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு ஊராட்சி மன்ற வளாகத்தில் ஊராட்சி மன்றதலைவர் பச்சைமால் தலைமையில், துணை தலைவர் செல்வகுமார் முன்னிலையில் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் வரவு-செலவு வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டன. 15 ஆவது நிதிக்குழு மானியம், பிளாஸ்டிக் தடை செய்தல், தூய்மை பாரத இயக்கம், திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையை தக்கவைத்தல், திடக்கழிவு மேலாண்மை, நெகிழி இல்லா நிலையை உருவாக்குதல், நமக்கு நாமே திட்டம், போன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நடைபெற்ற கூட்டத்தில் பொதுமக்கள், சுய உதவி குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் மாலதி, ராமலட்சுமி, மாடசாமி என்ற தங்கம், ராஜா மறவன், மகாலட்சுமி, உலகத்தாள், ஈஸ்வரி, பரமேஸ்வரி, ஷகிதா பானு, கோமதி சங்கர், வள்ளிநாயகம், மற்றும் ஊராட்சி மன்ற செயலாளர் ராமர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

Owned & Published by S.Sivasakthivel, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: K.selvaraj Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: S.Sivasakthivel. Phone:04322-261577.
Chennai Office: Chief Reporter S.Kadar Hussain, ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com

02.05.2022 ❖ வரலாறு

# திருவள்ளூர் மாவட்டம் சோழவரம் ஒன்றியத்தில், அதிமுக கோடைகால தண்ணீர் பந்தல் திறப்புவிழா



திருவள்ளூர் ,மே.2-

திருவள்ளூர் மாவட்டம் சோழவரம் ஒன்றியத்தில், அதிமுக கொடைகால தண்ணீர் பந்தல் திறப்புவிழா நடைபெற்றது.

இதில் அதிமுக சோழவரம் ஒன்றிய கழக செயலாளர் பி.கார்மேகம் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முன்னாள் அமைச்சரும் அதிமுக திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளருமான மாதவரம் வி.மூர்த்தி கலந்துகொண்டு தண்ணீர் பந்தலை திறந்து வைத்து பின்னர் பொதுமக்களுக்கு மோர், தர்பூசணி , வெள்ளரிக்காய் இளநீர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கே.பார்த்திபன், எஸ்.மனோகரன், எம்.மாணிக்கம்.டி.கே.பாலாஜி, எஸ்.எம்.ஜி.சீனிவாசன், முன்னாள் எம்எல்ஏ ஆர்.சக்குபாய், எஸ்.ஆதிலட்சுமி, நா.ஆனந்த், என்.ஹரி, ஏ.ஜெகன், கே.வேலாயுதம், டி.ஆலயசாமி, பிரபுதாஸ், காமராஜ், ஆட்டந்தங்கல் குமார், டி.சுதாகர், பி.செல்வராஜ், பிரசாத், நந்தகுமார், மன்சூர் அலி, பழனி, சங்கையா, ராதிகா, பாலகணேசன், எஸ்.வடிவேல், சாமி.வடிவேல், பாடியநல்லூர் வேலு, சி.கண்ணன், சரவணன், ராஜவேலு, ஹரி,ராஜா, மூர்த்தி, எம்.வெங்கடேசன், எம்.ஜீ,ஆர் குமரேசன், எஸ்.பழநி,கே.ஆர்.மணிமாறன், சோத்துப்பெரும்பேடு கண்ணன்,வெங்கடேசன், ஜான், பாலு, எடைப்பாளையம் வினோத், பரத்,காந்திநகர் சுகுமார்,ரமேஷ்,சுரேந்தர், காரனோடை செந்தமிழன், எருமைவெட்டிபாளையம் குமரன், வீரா, ஆத்தூர் சுதாகர், அலமாதி மதன் பிரவீன்குமார், கே.மோகன், பாலாஜி ,ஒரக்காடுராஜேஷ்,மகளிர் அணியினர் சரோஜா, ஜெயந்தி, ரோஜா, லலிதா, ரேவதி, உஷாராணி, எம்.தேவி மற்றும் பலர் திரளான அளவில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சி ஏற்பாட்டினை மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர்கள் அணி செயலாளர்பி.கே.செல்வம், சோழவரம் ஒன்றிய தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளரும், வழக்கறிஞருமாகிய பி.கே.பாலன் இணைந்து சிறப்பான முறையில் செய்து இருந்தனர்

# ரம்ஜானை கொண்டாட தலைநகரிலிருந்து சொந்த ஊருக்கு படையெடுக்கும் மக்கள்

சென்னை ,மே.2-

ரம்ஜான் பண்டிகையை கொண்டாட வங்கதேசத்தில் மக்கள் சொந்த ஊர் திரும்ப தொடங்கியுள்ளனர்

இஸ்லாமியர்களின் புனித பண்டிகையான ரம்ஜான் பண்டிகையை கொண்டாடுவதற்காக வங்கதேசத்தில் தலைநகர் டாக்காவிலிருந்து சொந்த ஊர்களுக்கும்மக்கள்திரும்ப தொடங்கினர். இதனால் பல்வேறு ஊர்களுக்கு செல்லும் ரயில்களில் கூட்டம் நிரம்பி வழிகிறது. ரயில் பெட்டிகளுக்குள் இடம் இல்லாததால் மக்கள் ரயிலுக்கு மேலேயும் அமர்ந்து ஆபத்தான வகையில் பயணிக்கின்றனர்.

ரயில்கள் மட்டுமல்லாமல் படகுகளிலும் கூட்டம் அலைமோதுகிறது. கடந்த 2 ஆண்டுகளாககொரோனா பொது முடக்கம் காரணமாக ரம்ஜானை சரியாக கொண்டாட முடியாத நிலை இருந்தது.

இந்த ஆண்டு கொரோனா கட்டுப்பாடுகள் முற்றிலும் நீக்கப்பட்டுள்ளதால் ரம்ஜான் பண்டிகையை உற்சாகமாக கொண்டாட மக்கள் ஆர்வம் காட்டுகின்றனர். டாக்காவிலுள்ள பெரும்பாலான நிறுவனங்கள்ரம்ஜானுக்காக தொழிலாளர்களுக்கு சிறப்பு விடுமுறை அறிவித்துள்ளன. எனவே தலைநகரில் இருந்து பல லட்சம்பேர்ரயில்களிலும், பேருந்துகளிலும், படகுகளிலும் சொந்த ஊருக்குசெல்வார்கள்என மதிப்பிடப்பட்டுள்ளது.

கோயில் திருவிழாக்களில் உயிரிழப்புகள் நடக்காத வகையில்

# திருவிழாக்களை நடத்த அரசு நடவடிக்கை பேரிடர் மேலாண்மை முதன்மை செயலாளர் தெரிவித்துள்ளார்



நாகை ,மே.2-

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் திருச்செங்காட்டங்குடி உத்தராபதீசுவர சாமி கோயிலின் ஆண்டு திருவிழாவை முன்னிட்டு நேற்று முன்தினம் இரவு தேர்த் திருவிழா நடைபெற்றது.

திருச்செங்காட் டாங்குடி மேலவீதியை சேர்ந்த தீபன்ராஜ் (30) தேருக்கு முட்டுக்கட்டை போடும் பணியில் ஈடுபட்டிருந்தார். அப்போது எதிர்பாராதவிதமாக தடுமாறி கீழே விழுந்தார். அப்போது தீபன்ராஜின் வயிற்று பகுதியில் தேர் சக்கரம் ஏறி படுகாயம் அடைந்த அவர் அதேஇடத்தில் பரிதாபமாக இறந்தார்.

இதனால் பரபரப்பு ஏற்பட்டது. தேர் சக்கரத்தில் சிக்கி இறந்த தீபன்ராஜின் குடும்பத்தினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின், முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ.5 லட்சமும், திமுக கட்சி நிதியிலிருந்து ரூ.3 லட்சமும் ஆக மொத்தம் ரூ.8 லட்சம் நிவாரணமாக அறிவித்தார்.

அத்தொகையை சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் மெய்யநாதன், நேற்று முன் தினம் வழங்கினார். இந்நிலையில், தஞ்சாவூர் களிமேடு தேர் விபத்தில் மின்சாரம் பாய்ந்து 11 பக்தர்கள் உயிரிழந்த சம்பவம் தமிழகத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. விபத்து குறித்து அரசின் உத்தரவின்பேரில், வருவாய்த்துறை மற்றும் பேரிடர் மேலாண்மை முதன்மை செயலாளர் குமார் ஜெயந்த் விசாரணை நடத்தி வருகிறார்.

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் திருச்செங்காட்டாங்குடி கோயில் தேர் சக்கரத்தில் சிக்கி ஒரு இளைஞர் இறந்த சம்பவம் குறித்து தகவலறிந்த குமார் ஜெயந்த் நேற்று திருச்செங்காட்டான்குடி கிராமத்திற்கு வந்தார். உத்தராபதீசுவர சாமி கோயிலின் தெருவடைத்தான் தேரை ஆய்வு செய்த அவர், தேர் சென்ற நான்கு மாட வீதிகளிலும் ஆய்வு செய்தார். பின்னர் அவர் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது தஞ்சாவூர் களிமேடு தேர் விபத்து குறித்து விசாரணை நடத்துவதற்காகதான் நான் நியமிக்கப் பட்டுள்ளேன். அதற்கு இடையில் நாகை மாவட்டம் திருச்செங்காட்டான்குடி தேர் திருவிழாவில் ஒரு இளைஞர் இறந்ததால் நான் இங்கு விசாரணை நடத்த வந்துள்ளேன். களிமேடு சம்பவத்திற்கும் திருச்செங்காட்டான்குடி சம்பவத்திற்கும் வேறுபாடு உள்ளது.

திருச்செங்காட் டான்குடியில் நடந்த சம்பவம் மீண்டும் நடக்க கூடாது என்பதற்காக, விசாரணை நடத்தி உள்ளோம். இது தொடர்பாக அரசுக்கு அறிக்கை அளிக்க உள்ளோம். இனி கோயில் திருவிழாக்களில் உயிரிழப்புகள் நடக்காத வகையில், திருவிழாக்களை நடத்த அரசு நடவடிக்கை எடுக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

# பனங்குடி ஊராட்சியில் மே 1 தொழிலாளர் தின கிராமசபை கூட்டம் நடைப்பெற்றது



நாகப்பட்டினம்,மே.2-

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் பனங்குடி ஊராட்சியில் மே 1 தொழிலாளர் தினத்தை முன்னிட்டு கிராமசபை கூட்டம் நடைபெற்றது.கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் அருண் தம்புராஜ் தலைமை தாங்கினார்.தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழக தலைவர் கௌதமன்,முகம்மது ஷாநவாஸ் எம்.எல்.ஏ ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது:

கிராமத்தை ஆக்கப்பூர்வமாக கொண்டு செல்வதே கிராம சபா கூட்டமாகும்.இந்த கிராமசபை கூட்டத்தில் மக்களுக்கு எல்லா விஷயங்களும் தெளிவாக தெரியப்படுத்தப்பட வேண்டும். இதுவரை நாம் என்ன பயனடைந்திருக்கிறோம்.இனி என்ன செய்ய வேண்டும் என்பதை மக்கள் முதலில் புரிந்து கொள்ளவேண்டும். அடுத்த 3 மாதத்திற்குள் கிராமசபா கூட்டம் நடைபெறும். இக்கூட்டத்தின் முக்கிய நோக்கம் நமக்கு தேவையான திட்டங்கள் என்ன என்பதை முதலில் பொதுமக்களாகிய நீங்கள் அறிந்துக்கொள்ள வேண்டும்.

இக்கூட்டத்தை பொருத்தவரை மக்களே மக்களுக்கு தேவையான விஷயங்களைதலைவர் மற்றும் உறுப்பினர்கள் மூலமாக செயல்படுத்திக்கொள்வது ஒரு சிறந்தவாய்ப்பு.2011-ம் ஆண்டோடு முடிந்துபோன இத்திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் மீண்டும் அறிவித்துள்ளார்.இந்த கிராமம் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மற்றும் கலைஞரின் அனைத்து கிராம வேளாண்மை வளர்ச்சி திட்டத்திலும் இடம்பெற்றுள்ளது. இந்த கிராமத்தில் துறைகள் ஒருங்கிணைந்து கிராம மக்களின் 17 தேவைகளை அறிந்து அதனை பூர்த்தி செய்வதற்கான பொறுப்பு ஒவ்வொரு துறை அலுவலர்களுக்கும் உள்ளது. இந்த வருடம் 2022-23-க்கு 100 நாள்வேலையில் என்னதிட்டம் செயல்படுத்த வேண்டும் என்பதையும்,இந்த கிராமசபா கூட்டத்தில் கூறப்படுகின்ற திட்டத்தில் உங்களுடைய அனைத்து கருத்துகளையும் தெரிவிக்கலாம்.

இந்தபனங்குடிகிராமத்தை நீர்நிறைந்த கிராமமாக அதற்கு இக்கிராமத்தில் உள்ள குளங்களை தூர்வாரி ஆழப்படுத்துவது மற்றும் பண்ணை குட்டைகள் அமைப்பதன் மூலமாகவும் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்திட முடியும்.நமக்கு மட்டுமின்றி வருங்கால சந்ததியினருக்கும் பயன்படும் வகையில் நீர்வளத்தை பாதுகாத்திட வேண்டும்.கிராமத்தை சுத்தமாக வைத்துகொள்ள வேண்டும். சுகாதாரம் என்பது வீட்டிலிருந்த தான் ஆரம்பம் ஆகிறது. அனைவரும் குப்பைகளை குப்பை தொட்டில் போட வேண்டும்.கிராமத்தில் உள்ள அனைத்து வீட்டிலும் கழிப்பறையை பயன்படுத்த வேண்டும்.திறந்த வெளியில் மலம் கழிப்பது ஒரு குற்றம் ஆகும். அனைவரும் சுத்தமான பசுமையான கிராமமாக மாற்றுவதற்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். பள்ளிகளில் 20 நபர்கள் கொண்ட பள்ளி மேலாண்மை குழு அமைக்கப்பட்டு பள்ளிகள் மற்றும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு செயல்படுத்தப்படுகிறது.

நமது மாவட்டத்தில் நமக்கு நாமே திட்டத்தில் பஞ்சாயத்து மூலமாக செயல்படுகின்ற திட்டங்கள் கிராம புறமக்களுக்கு நேரடியாக சென்று சேர்வதை காண்காணிப் பதற்காகத்தான் இதுபோன்ற கிராமசபா கூட்டம் நடத்தப்படுகிறது என மாவட்ட கலெக்டர் தெரிவித்தார். இக்கிராம சபா கூட்டத்தில் உதவி இயக்குநர் ஊராட்சிகள் சவுந்தரராஜன்,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பாலமுருகன்,பாத்திமா ஆரோக்கியமேரி, வேளாண்மை இணை இயக்குநர் ஜாக்குலா அக்கண்டராவ்,திருமருகல் வட்டார ஆத்மா குழு தலைவர் செல்வசெங்குட்டுவன்,பனங்குடி ஊராட்சிமன்றதலைவர் ஜமுனா செந்தில்குமார், ஒன்றியக்குழு உறுப்பினர் வினோதினி கார்த்திக்,அரசு அலுவலர்கள், ஊராட்சி பேரிடர் மேலாண்மை குழு உறுப்பினர்கள்,மகளிர் சுயஉதவிக்குழுஉறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்துக்கொண்டனர். இதேபோல் கட்டுமாவடி ஊராட்சியில் ஊராட்சி மன்ற தலைவர் சரவணன் தலைமையிலும்,குத்தாலத்தில் மகேந்திரன் தலைமையிலும், நரிமணத்தில் கார்த்திக் தலைமையிலும்,திருமருகலில் கண்ணன் தலைமையிலும், உத்தமசோழபுரத்தில் ஜனனி பாலாஜி தலைமையிலும் கிராமசபா கூட்டம் நடைபெற்றது.

# ரம்ஜான் பண்டிகை அன்று ஊரடங்கு எந்த மாநிலத்தில் தெரியுமா?

கார்கோன் ,மே.2-

மத்திய பிரதேசத்தில் ரம்ஜான் பண்டிகை தினத்தன்று ஊரடங்கை பிறப்பித்து அம்மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

மத்தியபிரதேசமாநிலம் கார்கோனில் கடந்தமாதம் நடைபெற்ற ராமநவமி நிகழ்ச்சியில் இருதரப்பு மக்களிடையே பயங்கர வன்முறை வெடித்தது. இந்தக்கலவரத்தில் ஒருவர் உயிரிழந்தார். 24 பேர் படுகாயமடைந்தனர்.

இதுதொடர்பாக பலர் கைது செய்யப்பட்டனர். இந்த சம்பவத்தை அடுத்து மத்திய பிரதேசத்தில் அடுத்தடுத்து நடைபெறும் பண்டிகைகளுக்கு கடுமையான கட்டுப்பாடுகளை மாநில அரசு விதித்து வருகிறது.

இந்நிலையில்,ரம்ஜான் பண்டிகை நாளை அல்லது நாளை மறுதினம் கொண்டாடப்பட இருக்கிறது. இதனை முன்னிட்டு, கலவரம் நடந்த கார்கோன் மாவட்டத்தில் திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமை ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோல,அன்றைய தினத்தில் அட்சயதிருதியை பண்டிகை கொண்டாட்டங்களுக்கும் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

# திருமுக்காடு ஊராட்சியில் கிராம சபை கூட்டம்



செங்கல்பட்டு ,மே.2-

செங்கல்பட்டு மாவட்டம்அச்சரப்பாக்கம் ஒன்றியம் திருமுக்காடு ஊராட்சியில் நடந்த கிராமசபை கூட்டத்திற்கு அவ்வூராட்சி மன்ற தலைவர் பெருமாள் வேதப்பன் தலைமை தாங்கினார்.

ஊராட்சி மன்ற துணை தலைவர் பாபு முன்னிலை வகித்தார். கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக மாவட்ட குழு உறுப்பினர் வசந்தா கோகுல கண்ணன் கலந்து கிராம மக்களிடம் நிறை குறைகளைகேட்டறிந்தார். தொடர்ந்து கூட்டத்தில் கிராமபுறத்தின் சுகாதாரம் மற்றும் அடிப்படை வசதிகள் குடிநீர், சாலை, தெருவிளக்குகள் உள்ளிட்டவைகள் ஏற்படுத்திதருவதுஉள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# கிராம சபை கூட்டத்தில் கை கலப்பு



செங்கல்பட்டு ,மே.2-

செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர் அடுத்தஇலத்தூர்வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு உட்பட்ட ஆக்கினாம்பட்டு கிராமம் இதில் ஊராட்சி மன்ற தலைவராக கமலக்கண்ணன் ஊராட்சி செயலாளரக சிவானதம் இருக்கின்றனர்.

இன்று சிறப்பு கிராம சபை கூட்டம் என்பதால் கிராம சபை கூட்டத்தில் பொது மக்கள் கலந்து கொண்டு ஊராட்சி மன்ற செயலாளர் அவர்களை பொது மக்கள் பொது கணக்குகளை கேட்டும் பணம் கையாடல் செய்துள்ளதை கிராம பொது மக்கள் அனைத்து ஆவங்களோடு கிராம சபைகூட்டத்தில்காமித்து கேள்வி கேட்டதால் கேள்விக்கு பதில் செல்ல முடியாததால்பொய்யான ஆவணங்களை கிராம சபை கூட்டத்தில் பொதுமக்களுக்கு தலைவர் கமலக்கண்ணன் காட்டியதால் இரு தரப்பினருக்கும் பெரும் வாக்குவாதம் ஏற்பட்டது.

அப்போது தலைவர் அடிப்படை வசதி கூட செய்து தராமல் பணம் கையாடல் செய்ததாக குற்றச்சாட்டு எழுந்தது இந்த நிலையில் இரு தரப்பினருக்கும் இடையே தள்ளமுள்ளு ஏற்பட்டதால் அங்கு பதற்றம் ஏற்பட்டது சம்பவ இடத்திற்கு வந்த செய்யூர் போலீசார் அவர்களை சமாதானம் செய்து கிராம சபை கூட்டத்தில் இருந்து வெளியேற்றினார் இதனால்ஆக்கினாம்பட்டு கிராம சபை கூட்டம் ரத்தனாதக வட்டார வளர்ச்சி அலுவலரால் அறிவிக்கப்பட்டது.

# பருக்கல் கிராமத்தில் கிராம சபை கூட்டம்



செங்கல்பட்டு ,மே.2-

செங்கல்பட்டு மாவட்டம் சித்தாமூர் ஒன்றியத்திற்குட்பட்ட பருக்கல் கிராமத்தில் நடந்த கிராமசபை கூட்டத்திற்கு அவ்வூராட்சி மன்ற தலைவர் சிவக்குமார் தலைமை தாங்கினார். துணை தலைவர் ராஜேஷ் முன்னிலை வகித்தார்.

இக்கூட்டத்தில் ஊராட்சியில் அங்கன்வாடி,பள்ளிகளில் உள்ள கழிப்பறைகளை வாரம் ஒருமுறை தூய்மை படுத்துதல், கிராமத்தில் குடிநீர் வினியோகிக்கும் கைப்பம்பு, விசைப் பம்பு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி முறையாக பராமரித்தல், அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தருதல் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் வேதாச்சலம், வார்டு உறுப்பினர்கள் மற்றும் கிராம மக்கள் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



▶ நாகை மாவட்டம் திட்டச்சேரி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் பள்ளி மேலாண்மை குழு மறுகட்டமைப்புக்கான தேர்தல் கூட்டம் நடைபெற்றது.கூட்டத்திற்கு பள்ளியின் தலைமையாசிரியர் வேம்பு தலைமை தாங்கினார்.திருமருகல் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) பாத்திமா ஆரோக்கியமேரி முன்னிலை வகித்து தேர்தல் நடத்தும் அலுவலராக செயல்பட்டு பள்ளி மேலாண்மை குழுவிற்கான தேர்தலை நடத்தி தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தேர்வு செய்து அவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார்.இதில் பள்ளி மேலாண்மை குழு தலைவராக அஸ்கர் நிஷா தேர்வு செய்யப்பட்டார்.மேலும் துணை தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.இதில் பேரூராட்சி மன்ற தலைவர் ஆயிஷா சித்திக்கா,பேரூராட்சி மன்ற உறுப்பினர் பாத்திமா பர்வீன் மற்றும் பெற்றோர்கள்,பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



▶ திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் அடுத்த பிஞ்சூர் ஊராட்சியில் சாமந்திபுரத்தில் உள்ள அரசு தொடக்கப்பள்ளி வளாகத்தில் மே-1 உழைப்பாளர் தினத்தினை முன்னிட்டு கிராம சபைக் கூட்டம் நடைபெற்றது.அதில் பிஞ்சூர் ஊராட்சியின் 12 பிரிவுகளுக்கான வரவு செலவு கணக்கு முறையினைப் பற்றி மக்கள் மத்தியில் கூறப்பட்டன. அதில் அதிகப்படியான ஊழல் நடந்துள்ளது என பொதுமக்கள் ஊராட்சி மன்றத் தலைவர் ஆனந்தனிடம் முறையிட்டனர்.இதற்கு வட்டார வளர்ச்சி அலுவலக துணை அதிகாரி சிவக்குமார் மக்களை ஒருமையில் பேசி அடக்கு முறையினை நேரிட்டார்.மேலும் பொதுமக்கள் வைத்த கோரிக்கையையும்,வரவு செலவு கணக்கின் கேள்விகளுக்கு சரிவர பதில் அளிக்க முடியாததாலும் உடனே கிராம சபை கூட்டத்தினை தவிர்த்து தக்க பதில் ஏதும் கூறாமல் சிவக்குமார் சென்றுவிட்டார்.இதனால் மக்கள் மிகவும் அதிர்ச்சியில் உள்ளனர்.எனவே பிஞ்சூர் ஊராட்சி பொதுமக்கள் ஊராட்சி சார்ந்த 29 துறை அதிகாரிகளில் 5 அலுவலர்கள் மட்டுமே வருகை புரிந்ததனால் மீண்டும் கிராம சபை கூட்டம் நடத்தி அனைத்து துறை அலுவலர்களையும் வரவைத்து கிராம சபை கூட்டம் நடத்தப்பட வேண்டும் எனவும் அதில் முறையான வரவு செலவு கணக்கினை மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும் எனவும் பிஞ்சூர் ஊராட்சி தலைவரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தரங்கம்பாடி பேரூராட்சியில் ரூ 1.50 கோடியில் புதிதாக மின் தகன மேடை அடிக்கல் நடும் நிகழ்ச்சி



தரங்கம்பாடி,மே.2-

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தேர்வுநிலை பேரூராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலதன மான்ய நிதி திட்டத்தின் கீழ் சந்தைவெளித்தெரு சுடுகாடு அமைந்துள்ள இடத்தில் ரூ.1 கோடி 50 லட்சம் மதிப்பீட்டில் மின்தகன மேடை அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது.


இதில் பூம்புகார் சட்டமன்றஉறுப்பினரும், நாகை வடக்கு மாவட்ட திமுக பொறுப்பாளருமான நிவேதா எம்.முருகன் கலந்து கொண்டு அடிக்கல் வைத்து கட்டிட பணிகளை துவக்கி வைத்தார். நிகழ்ச்சியின்போது தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுண சங்கரி, செம்பை ஒன்றிய பெருந்தலைவர் நந்தினி ஸ்ரீதர், செம்பை தெற்கு ஒன்றிய தி.மு.க.செயலாளர் எம்.அப்துல் மாலிக், பேரூராட்சி துணைத் தலைவர் பொன். ராஜேந்திரன், பேரூர் திமுக துணை செயலாளர் மதியழகன் மற்றும் தரங்கம்பாடி பேரூராட்சியின் வார்டு உறுப்பினர்கள், திமுக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.



# சமஸ்கிருத உறுதிமொழி மதுரை கல்லூரி முதல்வருக்கு சிக்கல்

# புதுக்கோட்டையில் மூதாட்டியை கற்பழித்தவர்கள் மீது குண்டாஸ்





# எம்ஆர்பியை விட கூடுதல் விலை துவார் கிராமத்தில் தீர்மானம்


| சென்னை / புதுக்கோட்டை | 02.05.2022 | varalaruu.com | பக்கம்:5 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை
வரலாறு
நாளிதழ்

02.05.2022 திங்கள்

புதுகை

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

செரோம் கே. செரோம் , ஆங்கிலேய எழுத்தாளர் (பி, 1859) (இ. 1927)



ந. சஞ்சீவி , தமிழகத் தமிழறிஞர், எழுத்தாளர் (பி, 1927) (இ. 1988)



சத்யஜித் ராய் , இந்திய இயக்குநர், தயாரிப்பாளர் (பி, 1921) (இ. 1992)



கு. சின்னப்ப பாரதி , தமிழக புதின எழுத்தாளர், அரசியல்வாதி (பி, 1935)



## இன்றைய நினைவு நாள்

கிளாரா இம்மெர்வார் , செருமானிய வேதியியலாளர் (பி, 1870) (இ. 1915)



பாவ்லோ பிரையர் , பிரேசில் மெய்யியலாளர் (பி, 1821) (இ. 1997)



தேவிகா , தென்னிந்தியத் திரைப்பட நடிகை (பி, 1943) (இ. 2002)



வீ கிம் வீ , சிங்கப்பூரின் 4வது குடியரசுத் தலைவர் (பி, 1915) (இ. 2005)



புதுகை

# வரலாறு

நாளிதழ்

## தமிழ்நாடு முழுவதும் தாலுக்காக்கள் மாவட்டங்கள் வாரியாக செய்தியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்

கல்வித்தகுதி +2- தமிழில் எழுத்துப் பிழையின்றி எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்

மாதம் ஒன்றுக்கு குறைந்தது ரூ.10 ஆயிரத்திற்கு விளம்பரங்கள் சேகரிக்க வேண்டும்


விண்ணப்பிக்க வேண்டிய முகவரி

ஆசிரியர் - புதுகை வரலாறு : நம்பர் 1103,

பெரியார் நகர், ராஜகோபாலபுரம் போஸ்ட், புதுக்கோட்டை-3.

தொடர்புக்கு: 04322 261577


சம்பளம் தங்களின் உழைப்பை பொறுத்து வழங்கப்படும்